**செய்தி வெளியீடு எண்: 380** **நாள்: 26.06.2019**

**பொது (தேர்தல்கள்–3) துறை**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் 24.07.2019 முடிவடைவதைத் தொடர்ந்து ஏற்படும் காலி இடங்களை நிரப்புவதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் தேர்தல் கால அட்டவணையை வெளியிட்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| 1. | தேர்தல் அறிவிக்கையை வெளியிடும் நாள் மற்றும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான ஆரம்ப நாள் | 01.07.2019 (திங்கட்கிழமை) |
| 2 | வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் | 08.07.2019 (திங்கட்கிழமை) |
| 3. | வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்யும் நாள் | 09.07.2019 (செவ்வாய்கிழமை) |
| 4. | வேட்பு மனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 11.07.2019 (வியாழக்கிழமை) |
| 5. | வாக்குப் பதிவு நாள் | 18.07.2019 (வியாழக்கிழமை) |
| 6. | வாக்குப் பதிவு நேரம் | காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை |
| 7, | வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | 18.07.2019 (வியாழக்கிழமை) மாலை 5 மணி முதல் |
| 8. | தேர்தல் நடவடிக்கைகள் முடிவுறும் நாள் | 22.07.2019 (திங்கட்கிழமை) |

2. இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் செயலாளரை தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் கூடுதல் செயலாளரை உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும் நியமனம் செய்துள்ளது. வேட்பு மனுக்களை பிற ஆவணங்களுடன் தேர்தல் நடத்தும் அதிகாரி முன்போ அல்லது உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி முன்போ தலைமைச் செயலகத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் 01.07.2019 முதல் 08.07.2019 வரை காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை, 1881ஆம் வருட செலாவணி முறிச்சட்டத்தின்கீழ் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள 07.07.2019 (ஞாயிற்றுக்கிழமை) தவிர, பிற நாட்களில் தாக்கல் செய்யலாம். வாக்குப் பதிவு, தேவைப்படின், “சட்டமன்ற குழுக்கள் அறையில்” 18.7.2019 அன்று நடைபெறும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**